# மழைகொட்டித் தீர்த்தாலும்.. மயில்வண்ணம் கரையாது! மன்னவனே..! உன்நினைவு மனம்விட்டு மறையாது!



**ஆ**கஸ்ட் 7
ஏந்தெழில் மிகுந்த
ஏழிசைத் தமிழைத்
திரையிலும் உரையிலும்
தித்திக்கத் தந்த
தேன்கடல் கலைஞர்தம்
பொன்னுடல் துறந்து
புகழுடல் பெற்ற நாள்
இன்று!

**மனமெல்லாம் ஓடிவரும்**
**மகரந்த நதியாக**
**மழைபோலச் சுரந்துவரும்**
**மாப்புலவர் மதியாக**
**பகுத்தறிவுப் பாசறையின்**
**பண்பாட்டு விதியாக**
**தண்டமிழ் நாட்டின்**
**தனிப்பெரும் பதியாக**
**தமிழர்க்கு வாய்த்த**
**தகைசான்ற நிதியாக**

**முத்திரை பதித்த**
**முத்தமிழ் அறிஞர்**
**சிந்தனை நிறுத்தி நம்**
**சிந்தையை வருத்தி**
**விடைகொண்டு சென்றநாள்!**
**விழியழுது வெந்தநாள்!**

கண்கள்தொடும் தூரத்தில்
காலமெல்லாம் இருந்தவர்
காதுமடல் ஓரத்தில்
கவிதைகளாய் வழிந்தவர்!

பொன்னுருக்கி வைத்ததுபோல்
புதுமைகளைச் சொரிந்தவர்
பூங்காற்றுத் தொட்டதுபோல்
புத்தின்பம் பொழிந்தவர்!

இளைத்தாலும் பசித்தாலும்
இயக்கத்தைச் சுமந்தவர்
இனத்தாலும் மொழியாலும்
ஏறுபோல் நடந்தவர்!

மடமையைக் கொளுத்துகிற
மகிமையாய் மலர்ந்தவர்
மந்திரச் சொற்களால்
மகத்துவம் புரிந்தவர்!

தீதுவரும் போதெல்லாம்
தீப்பந்தம் ஆனவர்
தேடிவரும் சூரியனாய்த்
தெருவெல்லாம் போனவர்!

அஞ்சுமுறை அரியணையை
அலங்காரம் செய்தவர்
அதிகாரம் இருந்தாலும்
அகங்காரம் இலாதவர்!

அண்ணாவைப் பெரியாரை
ஆயுதமாய்த் தாங்கியவர்
ஆகையினால் பகையதிர
அலட்சிமாய்த் தாக்கியவர்!

இமயத்தைக் கூட
இங்கிருந்தே தூக்கியவர்
இமய வரம்பனின்
வீரத்தின் பாக்கியவர்!

ஏறுகின்ற மேடையெல்லாம்
இலக்கியமாய் ஆக்கியவர்
இளைஞர்களை மனப்பாட
எந்திரமாய் ஊக்கியவர்!

சமூக நீதிக்குச்
சாசனங்கள் தீட்டியவர்
சமத்துவ புரங்களினால்
சாதிகளை வெருட்டியவர்!

சாலைகளைச் சோலைகளாய்ச்
சாத்தியப் படுத்தியவர்
ஆலைகளை உருவாக்கி
அரியபுகழ் உடுத்தியவர்!

மாநிலத்தைக் கடந்தும்
மதிவண்ணம் செலுத்தியவர்
மானக் கொதிப்புடைய
அரசாட்சி நடத்தியவர்..

தீரமிகு முதல்வராய்த்
திக்குகளின் புதல்வராய்
ஈரமிகு தலைவராய்
இணையற்ற தமிழராய்

ஆட்சிக் கட்டிலை
அழகுசெய்த பெருமகனார்
மாட்சிமையின் உச்சத்தில்
மகுடம் புனைந்தளங்கள்
மனத்தலைவர் இனத்தலைவர்
கலைஞர் எனும் திருமகனார்
கண்மூடி நித்திரையில்
கரைந்தநாள்.. இன்று!

**உறைந்து கிடக்கும்**
**உள்ளத்தின் உள்ளே**
**நிறைந்து கிடக்கின்றன அவரின்**
**நினைவுப் பேரலைகள்!**

வானம் தராத வெளிச்சமாய்
வைகறை தராத குளிர்ச்சியாய்
அவரின்
எண்ணங்களும் வண்ணங்களும்
இறைந்து கிடக்கின்றன
இதயங்கள் தோறும்!

அவர் சமைத்துக் கொடுத்த
சமுதாயம்
அவர் அமைத்துக் கொடுத்த
ஆகாயம்
அவர் அள்ளிக் கொடுத்த
ஆதாயம்
அனைத்தும்...
கல்விக் கூடங்களாய்க்
காவிய மாடங்களாய்
வள்ளுவர் கோட்டங்களாய்
வாலறிவு படைக்கும்
வாசக சாலைகளாய்
நுண்ணறிவு புகட்டும்
நூதன நூலகங்களாய்
காலக் கறையானால்
தின்னவே முடியாத
திட்டங்களாய் சட்டங்களாய்க்
கொட்டிக் கிடக்கிறது
தமிழர்கள் வாழ்வியலில்!

'துரோகத்தை முதன்முதலில்
சந்தித்தபோது.. புண்பட்டேன்
துரோகம் தொடர்ந்தபோது
பண்பட்டேன்' என்னும்
அனுபவ மொழிகளில்
அரசியல் உணர்த்திய
அசாத்திய மனிதர் அவர்!

**'பலர் தி.மு.க.வைப்**
**பகைக்கிறார்களே**
**ஏன்?' என்று**
**நிருபர் ஒருவர்**
**நெருடலாய்க் கேட்டபோது..**
**சிவந்தபடி சொன்னார்**
**செந்தமிழ்க் கலைஞர்:**
**'குரங்குகளுக்குக் குறள்படிக்கவா**
**தெரியும்!**
**கிழித்தெறியத்தான் தெரியும்'**
**என்று!**

திருவாய் திறந்தாலே
தித்திக்கவும்..
தீப்பிடிக்கவும் பேசும்
திராவிடத் திரவியம்
வரலாற்றுக் காவியம்
'வாழ்ந்தநாள் எல்லாம்
போராட்டக் களத்தில்
புகுந்தநாள்' என்றே
செப்புப் பட்டயங்கள்
செய்துவைத்துப் போயிருக்கும்
அந்த
ஒப்பரிய தலைவரை
ஒருகணம் அசைபோட்டால்..

குருதி கொப்பளிக்கும்!
கொள்கை முரசொலிக்கும்!
எங்கே பகையென்று
இதயத்தில் எதிரொலிக்கும்!

வானம் இடியிடிக்கும்!
வானவில் குடைபிடிக்கும்!
ஞானம் துடிதுடிக்கும்!
ஞாயிற்றின் சுடர்வெடிக்கும்!

**மறக்க முடியுமா..அந்த**
**மாபெரும் தலைவரை!**
**வானமும் பூமியும்**
**வாழ்கின்ற நாள்வரை!**

தேனாய்.. தெள்ளமுதாய்
தீம்பழமாய்..தென்னகமாய்
ஞானத் தமிழ்வரமாய்
நாம்பெற்ற புதுநிறமாய்
ஆனவரைப் போற்றி
ஆனவரை புகழ்செய்வோம்!
புதியதோர் உலகத்தை
மறுபடியும் முறைசெய்வோம்!

மழைகொட்டித் தீர்த்தாலும்
மயில்வண்ணம் கரையாது!
மன்னவனே..உன்நினைவு
மனம்விட்டு மறையாது!



**டாக்டர்**
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.,**
*மேனாள் ஒன்றிய*
*இணையமைச்சர்*

